Australian Government
Department of Home Affairs

# அவுஸ்திரேலியாவில் வசிக்கும் அவுஸ்திரேலிய குடிமகன், நிரந்தரமாக வசிப்பவர் அல்லது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் நியூசீலாந்து குடிமக்கள்

நீங்கள் அவுஸ்திரேலிய குடிமகனாகவோ அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக வசிப்பவராகவோ அவுஸ்திரேலியாவில் வசிக்கும் நியூசீலாந்தின் குடிமகனாகவோ இருந்தால் உங்களால் அவுஸ்திரேலியாவுக்கு பிரயாணிக்கலாம்.

அவுஸ்திரேய சமூகத்தின் சுகாதார பாதுகாப்பையொட்டி அரசாங்கம் கடினமான எல்லைக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அவுஸ்திரேலியாவுக்குள் வரவும் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறவும் மிகவும் வரையறுக்கப்பட்ட விமான சேவைகளே அமுலில் உள்ளன. அதேவேளை உங்களால் விமான வழி பயணங்களை மேற்கொள்ள முடியாது. Smartraveller ஐப் பார்க்கவும். பிரயாண கட்டுப்பாடுகள் மாற்றப்படலாம். அடிக்கடி ஆராயுங்கள். பார்க்கவும்: தேசிய அமைச்சரவையின் ஊடக அறிக்கை.

நியூசிலாந்திலிருந்து வரும் தனிமைப்படுத்தப்படாத விமானத்தில் வருவோர் அல்லாத, அவுஸ்திரேலிய குடிமக்கள் உட்பட அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் அனைவரும் அவர்கள் தரையிறங்கிய பிரதேசத்திலுள்ள ஹோட்டல் போன்ற நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் 14 நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுதல் வேண்டும். பிரயாணிகளுக்கான கொரோனா வைரஸ் (COVID-19) பற்றிய அறிவுரைகளைப் பார்க்கவும்.

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதற்கான செலவினை நீங்கள் ஏற்க நேரிடலாம். தனிமைப்படுத்தல் தேவைகள் பற்றி மேலும் அறிந்துக்கொள்ள உள் நாட்டு அல்லது உள்ளூராட்சி சுகாதார திணைக்களத்தை தொடர்புகொள்ளுங்கள்.

## அவுஸ்திரேலிய குடிமகன்

விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் அவுஸ்திரேலிய குடிமக்கள் என்ற வகையில் அங்கீகரிக்கப்படாத விசா இல்லாமல் கூட நாட்டுக்குள் பிரவேசிக்கலாம். அவுஸ்திரேலிய நாட்டிற்கு பிரவேசிப்பதற்காக நீங்கள் தற்போது வசிக்கும் நாட்டிலிருந்து வெளியேறும் போது, அவுஸ்திரேலிய நாட்டின் கட்டுப்பாடுகளை பற்றி அறிந்திருக்க வேண்டும். Smartraveller ஐப் பார்க்கவும்

உங்களிடம் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு இல்லாத படசத்தில், அவசர நிலைமையின் போது உங்களுக்கு கடவுச்சீட்டொன்று வினியோகிக்கப்படலாம். விமானச் சேவை உத்தியோகத்தர்களிடம் நீங்கள் அவுஸ்திரேலிய குடியுரிமைப் பெற்றவர் என்பவர் என்பதை நிரூபிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க உங்களுக்கு விசா அவசியமாகாது. உங்கள் குடியுரிமையை உறுதிசெய்யும் பொருட்டு, விமானச் சேவை அவுஸ்திரேலிய எல்லை பாதுகாப்பு படையை தொடர்பு கொள்ளும். உங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவனங்களை நீங்கள் தன்னகம் வைத்திருத்தல் வேண்டும்.

## அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக வசிப்பவர்

அவுஸ்திரேலியாவின் நிரந்தர வதிவாளர்களும் குடும்ப வீசா ஒதுக்கீட்டைப் பெற்ற குடும்பங்களும் நாட்டை அடையலாம். பயணச் சலுகைகளுக்கும் பயணக் கட்டுபாடுகளுக்குமான ஆலோசனைகள் பகுதியைப் பார்க்கவும்.

நிரந்தர வீசாவொன்று காலாவதியாக வழமையாக 5 வருடங்கள் வரை எடுக்கும். நீங்கள் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியே சென்றுள்ளபோது உங்கள் வீசா காலாவதியானால் உங்களால் மீண்டும் அவுஸ்திரேலியாவுக்கு வர இயலாது.

நிரந்தர வதிவாளராக எவ்வாறு அவுஸ்திரேலியாவை வந்தடைவது என்பதைப் பற்றி அறிந்துக்கொள்ள நிரந்தர வதிவாளர் எனும் பகுதியைப் பார்க்கவும்.

## முதல் (ஆரம்ப) வரவுத் திகதி

இந்தத் தகவல்கள் அவுஸ்திரேலியாவின் நிரந்தர வதிவாளர்களுக்கும் குடும்ப வீசா ஒதுக்கீட்டைப் பெற்ற குடும்பங்களுக்கும் மட்டுமானது:

- துணைவர் (உப பிரிவு 309 அல்லது 100)
- பெற்றோருக்கான வீசாக்கள் (உப பிரிவு 143 அல்லது 103)
- பிள்ளைகளுக்கான வீசாக்கள் (உப பிரிவு 101 அல்லது 102 அல்லது 445)
- ஏனைய குடும்ப வீசாக்கள் (உப பிரிவு 114, 115, 116 அல்லது 117)

வீசாவின் முதல் வரவுத் திகதிக்கு முன்னர் உங்களால் அவுஸ்திரேலியாவை அடைய முடியாமல் போனாலும் கூட அதற்கு பின்னரும் உங்களால் அவுஸ்திரேலியாவை அடைய சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால் அதற்காக உங்களிடம் செல்லுபடியான வீசாவும் ஏனைய தகைமைகளையும் வீசா நிபந்தனைகளையும் பூர்த்திசெய்தும் இருத்தல் வேண்டும்.

நீங்கள் பயணிக்க உத்தேசிக்கும் போது, பயண உதவி கடிதத்துக்கான விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து சமர்ப்பிக்க வேண்டும்.

வீசாவின் முதல் வரவுத் திகதிக்கு பின்னர் வரும் நீங்கள் அவுஸ்திரேலியாவில் வந்திறங்க அனுமதி பெற்றுள்ள பிராந்தியத்துக்கு பயண உதவிக் கடிதமொன்றை நாம் அனுப்பக்கூடும். நாங்கள் உங்களுக்கு பயண உதவிக் கடிதமொன்றை வழங்குவோமாயின், விமானப்

பயணத்தை தொடங்கவுள்ள நிலையத்துக்கு அதனைத் தவறாமல் கொண்டு வாருங்கள். விமான நிலையத்தில பயணத்தை ஆரம்பிக்கும் முன்னரான சரிபார்ப்புக்கும் அவுஸ்திரேலியாவை அடைந்த பின்னர் இடம்பெறும் சரிபார்க்கும் அதனைக் காட்டவேண்டி ஏற்படலாம்.

மேலே குறிப்பிட்ட குடும்ப வீசா வகைகளில் ஒன்றை நீங்கள் கொண்டிருந்தும் அதேவேளை முதல் வரவுத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குட்பட்ட காலத்திலும் இருந்தாலே ஒழிய பயண உதவிக் கடிதங்கள் உங்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

**குறிப்பு:** முதல் (ஆரம்ப) வரவுத் திகதியானது ‘இந்த திகதிக்குப் பின்னர் வருதல் ஆகாது’ (இறுதி வரவுத் திகதி) திகதியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

நீங்கள் பயண உதவிக் கடிதமொன்றை கோருவீர்களேயானால், பின்வருவன குறித்துக் கருத்திற்கொள்ளல் அவசியம்:

- நீங்கள் அவுஸ்திரேலியாவின் நிரந்தர வதிவாளராகவோ குடும்ப வீசா ஒதுக்கீட்டைப் பெற்ற குடும்பமாகவோ இருத்தல்
- வீசா அனுமதி வழங்கலை உறுதிசெய்யும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் (ஆரம்ப) வரவுத் திகதியை கடந்தோ நீங்கள் அவுஸ்திரேலியாவை அடையும்போது கடக்கும் நிலையிலோ இருத்தல்
- அவுஸ்திரேலியாவை அடையும் உங்கள் உத்தேசம் 12 மாதங்களுக்குட்பட்டதாக இருத்தல்

திருமணத்தால் தகுதிபெறு (உப பிரிவு 300) வீசாவொன்றை நீங்கள் வைத்திருப்பீர்களேயானால், மேலதிக விபரங்களுக்காக வீசா விண்ணப்ப அறவீடுகள் குறித்த பணம் மீளப்பெறலும் தள்ளுபடியும் எனும் பகுதியைப் பார்க்கவும்.

## அவுஸ்திரேலிய நாட்டில் வசிக்கும் நியூசீலாந்து குடிமக்கள்

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் (துணைப்பிரிவு 444 விசாவோ ஏனைய நிரந்தர அல்லது மாகாண விசாவோ சகிதம்) நியூசீலாந்து குடிமக்கள் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கலாம்.

விமானம் மூலம் அவுஸ்திரேலியாவை நேரடியாக வந்திறங்குவதற்கு முன்னர் 14 நாட்கள் அதற்கு மேற்பட்ட காலத்துக்கு நீங்கள் நியூசீலாந்தில் தங்கியருந்தவராக இல்லாவிட்டால், உட்பிரவேசிக்கும் போது உங்கள் வதிவை உறுதிசெய்யும் ஆவணங்களை முன்வைக்க வேண்டும். வதிவை உறுதிசெய்வதற்காக அனுமதிக்கப்பட்ட ஆவணங்களில் பின்வருவன மட்டுமல்லாது வேறு பலவும் உள்ளடங்கலாம்:

- அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஆவனங்கள் (உதாரணமாக அவுஸ்திரேலிய நாட்டினால் வினியோகிக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம், வைத்தியச்சேவை

அட்டைகள், அவுஸ்திரேலிய வரிவிதிப்பு அலுவலகத்தால் அவுஸ்திரேலிய குடிமகன் என்ற பதிவு), குறிப்பாக இன்னுமொரு ஆவனத்தால் உறுதிசெய்யப்பட்டது:

- ○ உங்களிடமுள்ள தற்போதைய வேலைவாய்ப்போ அவுஸ்திரேலியாவில் அங்கீகாரம் பெற்ற கல்வி நடவடிக்கைகளோ (உள்நாட்டு வங்கி அறிக்கையின் மூலம் உறுதிசெய்யப்படும் நிதியுதவிக்கான சான்றுகளோ)
- ○ அவுஸ்திரேலியாவில் உங்கள் வசமான சொத்துக்களோ வாடகை சொத்துக்களோ (உதாரணமாக – அத்தியாவசிய சேவைக்கட்டண ரசீதுகள், அறவீட்டு அறிக்கைகள், குத்தகை ஒப்பந்தங்கள்)

நீங்கள் விமான நிலையத்தில் உள்நுழையும் போது இந்த ஆவனங்களை வழங்கலாம். நீங்கள் விமானப்பயணத்துக்காக உள்ளே ஏற்கப்படுவதற்கு முன்னர், உங்கள் முன்னைய பயண நடவடிக்கையின் பால் உங்கள் வதிவு உறுதிசெய்யப்படும். உங்கள் பயணத்துக்கான காரணம் தற்போதைய கட்டுப்பாடுகளுக்குள் அமைந்துள்ள விதிவிலக்குகளுடன் சார்ந்ததாக இருக்கு பட்சத்தில், மதிப்பீட்டுக்கான கோரிக்கையை நீங்கள் பயணிக்க உத்தேசிக்கும் தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனுப்ப முயற்சியுங்கள்.

உங்கள் கோரிக்கையை விடுங்கள்

## என்னிடம் அகதி மற்றும் மனிதாபிமான விசா (Class XB) உள்ளது

அவுஸ்திரேலிய குடிமகன் நிரந்தரமாக வசிப்பவர்களாகவோ வதிவாளர்களாகவோ இல்லாத மக்களை உள்நாட்டுக்குள் ஏற்றுக்கொள்ள புதிய COVID-19 பயணக் கட்டுபாடு வரையறைகள் அமுளில் உள்ளன.

உங்களிடம் அகதி மற்றும் மனிதாபிமான விசா (Class XB) இருக்கும் பட்சத்தில், நீங்கள் அவுஸ்திரேலிய நாட்டுக்குட்புகாத வேளையில், அவுஸ்திரேலிய நாட்டில் நிரந்தரமாக வசிப்பாளர்களாக கருதப்பட மாட்டீர்கள்.

அகதி மற்றும் மனிதாபிமான விசா (Class XB) வைத்திருப்போர், இதுவரை அவுஸ்திரேலியா நாடு நோக்கி பயணத்தை தொடராத சந்தர்ப்பத்தில், விதிவிலக்காத ஏ தேனும் விசேட அனுமதிகள் கிடைக்காத பட்சத்தில், அவர்கள் அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் விபரங்கள் அறிய, பயணக் கட்டுப்பாடுகள் ஐப் பாருங்கள்.

## இணையம் மூலம் சலுகைக்காக விண்ணப்பித்தல்

ஒருவர் ஒரு தடவை மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் செயற்பாட்டைத் தாமதப்படுத்தும். உங்களுக்கான சலுகை கிடைக்காத பட்சத்தில் நீங்கள் மேற்கொள்ளவிருந்த பயணத்தை தவிர்த்துக்கொள்ளுதல் சிறந்தது. காரணம் நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கபட மாட்டீர்கள். உங்களுக்கு பயணச் சலுகைக் கிடைக்கும் பட்சத்தில், நீங்கள் அது குறித்த ஆவனத்தை விமான நிலையத்துக்கு கொண்டுசெல்லுதல் வேண்டும்.

பயணச் சலுகைகளுக்காக விண்ணப்பித்தல்